मन की बात 100
MANN KI BAAT 100

# மன் கி பாத்

தொகுதி 1



# MANN KI BAAT

VOL.1

**Published by**
Amar Chitra Katha Pvt. Ltd

**Edition I**

**ISBN - 978-81-19242-32-0**

©Amar Chitra Katha Pvt. Ltd, May 2023
All rights reserved. This book is sold subject to the condition that the publication may not be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech or other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.



# மன் கி பாத்

தொகுதி 1

# The Route to your Roots

When they look back at their formative years, many Indians nostalgically recall the vital part Amar Chitra Katha comics have played in their lives. It was **Amar Chitra Katha** that first gave them a glimpse of their glorious heritage.
Since they were introduced in 1967, there are now over **500 Amar Chitra Katha** titles to choose from. **Over 100 million copies** have been sold worldwide.
Now, Amar Chitra Katha titles are even more widely available in **1000+ bookstores all across India**. If you do not have access to a bookstore near you, you can also buy all the titles through our online store, **www.amarchitrakatha.com**. We provide quick delivery anywhere in the world. To make it easy for you to locate the titles of your choice from our treasure trove of titles, the books are now arranged in six categories.

**Epics and Mythology**
Best known stories from the Epics and the Puranas

**Indian Classics**
Enchanting tales from Indian literature

**Fables and Humour**
Evergreen folktales, legends and tales of wisdom and humour

**Bravehearts**
Stirring tales of brave men and women of India

**Visionaries**
Inspiring tales of thinkers, social reformers and nation builders

**Contemporary Classics**
The best of modern Indian literature

**Illustrations and Cover Art:** Dilip Kadam

**Production:** Amar Chitra Katha

AMAR CHITRA KATHA PVT. LTD

© Amar Chitra Katha Pvt. Ltd, April 2023
Facebook: The Amar Chitra Katha Studio | Instagram: @amarchitrakatha | Twitter: @ACKComics | YouTube: Amar Chitra Katha

Get access to Amar Chitra Katha's digital library on the **ACK Comics App**. Visit **digital.amarchitrakatha.com**

You can now get ACK stories as part of your classroom with **ACK Learn**,
a unique learning platform that brings these stories to your school with a range of workshops.
Find out more at **www.acklearn.com** or write to us at **acklearn@ack-media.com**.

அக்டோபர் 3, 2014 அன்று பிரதமர் நரேந்திர மோடி இந்திய மக்களுக்கு சிறப்பான ஒரு விஷயத்தை அறிமுகப்படுத்தினார்.

என் அன்பான சக இந்திய குடிமக்களே! இன்று, விஜயதசமி பண்டிகையை முன்னிட்டு என் எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மாதம் ஒருமுறை அல்லது இரண்டு முறையாவது தொடர்ந்து செய்ய விரும்புகிறேன். அடிக்கடி சுவாமி விவேகானந்தர் கூறும் ஒரு கதையை உங்களுக்கு சொல்கிறேன்.



ஒருமுறை ஒரு பெண் சிங்கம் தன் இரண்டு குட்டிகளுடன் வெளியே சென்றபோது ஆட்டு மந்தையைக் கண்டது. அது ஆடுகளை வேட்டையாடப் பாய்ந்தது. ஒரு குட்டி அம்மாவுடன் ஓடியது. மற்றொன்று பின் தங்கியது.

அங்கேயே இருந்த குட்டியை ஒரு செம்மறி ஆடு பார்த்தது. சிங்கக்குட்டியையும் தன் குட்டியாக நினைத்து வளர்த்தது. சிங்கக்குட்டியும் ஆட்டு மந்தையோடு வளர்ந்தது. அவர்களைப் போலவே பேசி, அவர்களைப் போலவே சாப்பிட்டு, அவர்களைப் போலவே ஓடி வளைய வந்தது.

சில வருடங்கள் கழித்து, தாயுடன் தங்கி வளர்ந்த குட்டி, ஆடுகளுடன் வாழும் தன் சகோதரனைப் பார்க்க நேர்ந்தது. அதனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. ஏன் சிங்கம் ஆடுகளைப் போல் நடந்து கொள்கிறது என்று யோசித்தது.

"என்னவாயிற்று உனக்கு?" என்று கேட்டது. 'நீ ஏன் அவர்களைப் போல் பேசி நடந்து கொள்கிறாய்?'

'நான் அவர்களுடன்தானே வளர்ந்தேன். அவர்கள் என்னை வளர்த்ததால் என் பழக்கவழக்கம், மொழி மற்றும் நடத்தை அவர்களைப் போலிருக்கிறது' என்று சொன்னது.



'வா என்னுடன், நீ உண்மையில் யார் என்பதை உனக்குக் காட்டுகிறேன்' என்று முதல் சிங்கம் கூறியது.

தனது சகோதரனை ஒரு கிணற்றுக்கு அழைத்துச் சென்று தண்ணீருக்குள் பிரதிபலிக்கும் அவர்களைப் பார்க்கச் செய்தது.

'இதோ பார், உன் முகமும் என்னுடைய முகமும் ஒன்றாக இருக்கிறதல்லவா? நீ ஆடு அல்ல சிங்கம்.'

தன்னை எப்போதும் ஆடு என்று நினைத்துக் கொண்டிருந்த சிங்கம் வியந்தது. தன்னை ஒரு சிங்கமாக அப்போது உணர்ந்தது. ஒரு புதிய பலத்துடனும் சுயமரியாதையுடனும், தனது தலையைத் தூக்கி சிங்கம் கர்ஜித்தது.

இந்த நாட்டில் உள்ள நாம் அனைவரும் நம் சுயமரியாதையையும் தன்னம்பிக்கையையும் மீட்டெடுக்க வேண்டும். நமது பலத்தை நாம் உணர வேண்டும். அவ்வாறு செய்தால், நாம் முன்னேற்றமடைந்த வளமான தேசமாக இருப்போம்.


சாதாரண குடிமக்களாக இருந்தாலும், சக மனிதர்கள் , சக உயிரினங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக ஹீரோக்கள் போல உழைக்கும் சாம்பியன்களைப் பற்றிய கதைகளை பிரதமர் பல ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருக்கிறார்.
கர்நாடகாவின் தசன்னதோடி கிராமத்தைச் சேர்ந்த காமேகவுடாவைப் பற்றி இன்று சொல்லப் போகிறேன். ஆடு மேய்ப்பவராக இருந்தவர் வெப்பமான கோடைக் காலங்களில் மக்கள் மற்றும் விலங்குகளுக்குத் தண்ணீர் கிடைக்கும் வகையில் பதினாறு குளங்களை அவரே வெட்டினார்.
சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பல குழுக்களை அவர் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளார்.
பெங்களூரில் யூத் ஃபார் பரிவர்த்தன்* என்ற குழு உள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளாக அவர்கள் நகரத்தை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டு 350க்கும் மேற்பட்ட பகுதிகளை தூய்மைப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்களுடன் சேர்ந்து சுமார் 150 பேர் தெருக்கள், சுவர்கள், குப்பைக் கிடங்குகள் போன்றவற்றைச் சுத்தம் செய்கிறார்கள். அவர்களின் குறிக்கோள் ‘புகார் செய்வதை நிறுத்துங்கள், செயல்படத் தொடங்குங்கள்’
பிரதமர், சுதந்திரப் போராட்ட தியாகிகள் செய்த மகத்தான தியாகங்களை தனக்கே உரிய வகையில் நினைவுபடுத்தியுள்ளார்.
75 ரயில் நிலையங்கள் சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடையவை. ஜார்கண்டில் உள்ள கோமோ ஜங்ஷனில் இருந்துதான் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மாறுவேடத்தில் தப்பித்து ஜெர்மனிக்குச் சென்றார். உத்தரபிரதேசத்தில் உள்ள காகோரி ரயில் நிலையத்திலிருந்துதான் ராம் பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபகுல்லா கான் மற்றும் சந்திரசேகர் ஆசாத் போன்ற புரட்சியாளர்கள் பிரிட்டிஷ் கருவூலத்தில் இருந்து பணத்தை எடுத்துச் செல்லும் ரயிலைக் கொள்ளையடித்தனர்.
काकोरी
KAKORI
மிகவும் சுவாரஸ்யமான ஒரு எபிசோடில், வீடா மற்றும் சோஃபி ஆகிய இரண்டு ராணுவ நாய்கள் தங்கள் கடமையை அற்புதமாக செய்ததற்காக பிரதமர் நரேந்திர மோடி பாராட்டினார்.
சோஃபி, சிறப்பு எல்லைப் படை
வீடா, வடக்கு ராணுவம்
சோஃபி, வெடிகுண்டு செய்ய உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட மருந்துகளை மோப்பம் பிடித்தது. வீடா, ஐந்து கண்ணிவெடிகளையும் ஒரு கையெறி குண்டையும் கண்டுபிடித்து படையைக் காப்பாற்றியது. வீட்டில் ஒரு நாயை வளர்க்க நினைக்கும்போது, ஒரு இந்திய நாயை தத்தெடுக்கவும். அவை புத்திசாலித்தனமானவை, வலிமையானவை மற்றும் பராமரிக்க மிகவும் எளிதானவை. நாம் பெருமைமிக்க இந்தியர்களாக எல்லாவற்றிலும் இருப்போம்.
மன் கி பாத் 100 அத்தியாயங்கள் நிறைவு செய்தது. அனைத்து தரப்பு மக்களும் இந்த நிகழ்ச்சியைக் கேட்டு ஊக்கம் பெற்று வருகின்றனர்.

*மாற்றம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | யோகேஷ் சைனி | 6 |
| 2 | இஸ்மாயில் கத்ரி | 10 |
| 3 | ராஜு | 13 |
| 4 | குராங் மீனா | 16 |
| 5 | பொன் மாரியப்பன் | 19 |
| 6 | கல்மனே காமேகவுடா | 21 |
| 7 | பிரதீப் சங்வான் | 24 |
| 8 | காம்யா கார்த்திகேயன் | 27 |
| 9 | அன்வி சன்சாருக்கியா | 30 |


யோகேஷ் சைனி
வகுப்பறை உற்சாகமாக இருந்தது.
இக்பால், நாயர் சார் அடுத்த கிளாஸ் ஸ்பெஷல் ஆக இருக்கப் போகிறது என்றார்.
ஓ ஸ்ரேயஸ், லீப்ஃப்ராக் அல்லது கோகோ போல...
இக்பால் தன்னுடைய லிஸ்ட்டை முடிக்கும் முன் -
குட் மார்னிங் க்ளாஸ்!
குட் மார்னிங் சார்!
சார், இன்று என்ன செய்யப் போகிறோம்?
ஸ்ரேயஸ், ஒரு கேள்வி. மன் கி பாத் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா?
கேள்விப்பட்டிருக்கிறேன் சார்! அது ஒரு வானொலி நிகழ்ச்சி. அதில் நம் பிரதமர் நரேந்திர மோடி எங்களுடன் பேசி கதைகளும் சொல்லுவார்.
வெரிகுட் வித்யா. ஆனால் அவர் எதைப் பற்றி பேசுகிறார்?
அவர் இந்தியாவைப் பற்றியும் அற்புதமான செயல்களைச் செய்யும் இந்தியர்களைப் பற்றியும் பேசுகிறார்.
மிகச் சரி லட்சுமி!

# யோகேஷ் சைனி



அடுத்த சில வாரங்களுக்கு, ஒவ்வொரு நாளும் ஒரு பீரியட் மன் கி பாத்தில் விவாதிக்கப்படும் அற்புதமான மனிதர்களுக்கும், அவர்கள் நம் நாட்டில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள் என்பதற்கும் அர்ப்பணிக்கப்படும். முதல் நபர் நம் டெல்லியைச் சேர்ந்தவர். அவர் பெயர் யோகேஷ் சைனி.
நான் அவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். பாலத்தின் அடியில், சுவரில் அவரின் ஓவியங்களைப் பார்த்திருக்கிறேன்.
மிகச் சரி கௌரி! நம் ஊரை தூய்மைப்படுத்தி அழகாக்கும் ஓவியர் அவர். அவருடைய கதையை சொல்கிறேன்.
இருபது வருடங்கள் அமெரிக்காவில் இருந்துவிட்டு யோகேஷ் இந்தியா திரும்பியிருந்தார். ஒருநாள் அவர் லோதி பூங்காவில் நடந்து கொண்டிருக்கும் போது –
இவ்வளவு அழகான இடங்களில் வண்ணம் சிறிது சேர்ந்தால்... உலகம் வண்ணமயமாகவும் பிரகாசமாகவும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
நான் ஏன் என் ஊருக்கு வண்ணம் சேர்க்கக் கூடாது? இந்தக் குப்பைத் தொட்டிகளிலிருந்து ஆரம்பிக்கலாம். ஒரு சின்ன கூட்டம் போட்டால் மற்றவர்களும் என்னுடன் சேரலாம்.
சிறிது நாட்களில், புது தில்லி மாநகராட்சியின் ஒப்புதலுடன் ஸ்ட்ரீட் ஆர்ட் சாடர்டே ஏற்பாடு செய்தார்.
நாம் இருவர் மட்டும்தான் போலிருக்கிறது. ஆரம்பிக்கலாம்


சில மணிநேரம் கழித்து -
எவ்வளவு அழகு! சாதாரண குப்பைத்தொட்டியாக இருந்தவை இவை என்று நம்ப முடியவில்லை.
நமக்கு வேண்டுமென்றால் எல்லாமே கேன்வாஸ்தான்!
நாங்களும் பங்கெடுக்கலாமா? எங்களுக்கும் ஓவியம் பிடிக்கும்.
ART DAY
இருவர் நால்வராக, நான்கு எட்டாக, மெல்ல மெல்ல பலர் சேர்ந்தனர்.
டெல்லி ஸ்ட்ரீட் ஆர்ட் என்று அக்குழுவுக்குப் பெயர் வைத்தார். சீக்கிரமே அவர்கள் நகரத்தில் இருக்கும் சின்னச் சின்னப் பொருட்களை வண்ணமயமாக்கினார்கள். ஒரு நாள் -
நாம் சுவரோவியங்களும் வரைய ஆரம்பிக்க வேண்டும்.
பல ஓவியர்கள் நம்முடன் சேர்ந்து வேலை செய்ய ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜேந்திர நகர் குடிசைப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கலாம்.
ஆனால் அந்த இடம் மிக அழுக்காக இருக்கும்!
அப்படியென்றால் முதலில் அதை சுத்தம் செய்யலாம்.
அடுத்த நாள் –
என்ன செய்கிறீர்கள்?
கவலைப்படாதீர்கள் நண்பரே! நாங்கள் உங்கள் வீடுகளையும் கடைகளையும் அழகாக்குகிறோம்.
சிறிது நாட்களுக்குப் பின் -
எப்படியிருக்கிறது இப்போது? அழகாக இல்லை?
ஆமாம்! எங்கள் வீடுகள் வண்ணமயமாக இருக்கின்றன.


ஒவ்வொரு சுவரோவியத்தாலும் டெல்லி ஸ்ட்ரீட் ஆர்ட் நாளுக்கு நாள் பிரபலமாக ஆரம்பித்தது.
அடுத்து காந்தியை சுவரோவியமாக வரைய வேண்டும்.


அதேபோல் வரைந்தார். யோகேஷின் கைவண்ணத்தில் அந்நகரம் நம் தேசத்தந்தையின் குறிப்பிடத்தக்க சுவரோவியங்களைக் கண்டது.


ஒரு நாள் -
ஒரு சந்தோஷமான செய்தி. வாடிக்கையாளர் ஒருவர் பெங்களூரில் உள்ள ஒரு பெரிய பள்ளியை அலங்கரிக்கச் சொல்லியிருக்கிறார்.
அட்டகாசம்! அங்கிருக்கும்போது பொதுச் சுவர்களைக்கூட நாம் அலங்கரிக்கலாம்.


இந்தக் குழு நிறைய வேலை செய்து காலப்போக்கில் பெரிதாக வளர்ந்தது. கடந்த ஒன்பது ஆண்டுகளில், 15 முதல் 20 நகரங்களில் குடிசைகள், சிறைகள், தெருக்கள், ரயில் நிலையங்கள், பள்ளிகள், பல பொது மற்றும் தனியார் இடங்களை இவர்கள் அழகுபடுத்தியுள்ளனர்.
நம் சிறிய குழு பல நகரங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று என்னால் நம்ப முடியவில்லை.
இப்படி ஒவ்வொருவரும் அவரவர் நகரத்துக்குப் பங்களித்தால் இந்நாட்டையே மாற்றி விடலாம்.

# இஸ்மாயில் கத்ரி




*குஜராத்தின் பூஜ் அருகே உள்ள ஒரு கிராமம்.

^ 2001குஜராத் பூகம்பம்


சரி! நமக்கான சரியான இடத்தைத் தேடுகிறேன்.
தனது சமூகத்தின் தேவைகளை மனதில் கொண்டு, இஸ்மாயில் புஜ் அருகே ஒரு நல்ல இடத்தைக் கண்டுபிடித்தார். இந்த கிராமம் பின்னர் அஜ்ரக்பூர் என்று அழைக்கப்பட்டது.
நம் கலை இங்கு செழிக்கும்.
அந்த புதிய தொடக்கம் அவர்களுக்கு செழிப்பானதாக அமைந்தது...
ஆனால் புது பிரச்சினைகள் முளைத்தன.
உன் தந்தை எங்கே?
இஸ்மாயில் பாய், அப்பா வீட்டில் இருக்கிறார். அவருக்கு நேற்று வேலையிலிருந்து வந்ததிலிருந்து மூச்சு விட வே முடியவில்லை.
ரசாயன சாயங்கள் ஒவ்வாமை மற்றும் ஆஸ்துமாவை ஏற்படுத்துகின்றன. அதற்கு பதில் வேறு எதை உபயோகப்படுத்தலாம்?


அவர்களுக்கு பதில் இயற்கையில் கிடைத்தது. இயற்கை சாயங்களை உபயோகப்படுத்த ஆரம்பித்தனர்.
இந்த சிவப்பு மிகவும் பிரகாசமாக இருக்கிறது.
இது ஒரு மரத்தின் வேரிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அதனால் உனக்கு தோல் பிரச்சினைகள் ஏதும் வராது.
இவ்வாறு, அஜ்ரக் கலை வடிவம் ஒரு மனிதனின் மற்றும் அவரது சமூகத்தின் முயற்சியால் புத்துயிர் பெற்றது.
இன்று, அஜ்ரக் மிகவும் பிரபலம். கைவினைஞர்கள் பல்வேறு துணிகள் மற்றும் நவீன பாணிகளை பரிசோதித்து வருகின்றனர்.
இஸ்மாயில் கத்ரி ஒரு கலை வடிவத்தை புதுப்பித்ததற்காக 2003 ல் லீசெஸ்டரில் உள்ள டி மாண்ட்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்து கௌரவ டாக்டர் பட்டம் பெற்றார்.
Doctor of Arts
இவரது பணிக்கு தேசிய தகுதிச் சான்றிதழ் மற்றும் யுனெஸ்கோ முத்திரையும் கிடைத்துள்ளது.
டாக்டர் இஸ்மாயில் கத்ரியின் மகன்கள் மற்றும் பேரன்கள் என அவரது குடும்பத்தில் பதினோராவது தலைமுறையாக அஜ்ரக் கலையை விட்டுவிடாமல் அவரது பாரம்பரியத்தை தொடர்கின்றனர்.


ராஜு
நாயகரும் அவரது மாணவர்களும் நடைபயணம் சென்று கொண்டிருக்கிறார்கள்.
கமான் ஸ்ரேயஸ். சீக்கிரம் ஏறு. மதிய உணவை மலை உச்சியில் சாப்பிட வேண்டாமா?.
கால்கள் வலிக்கின்றன சார்! நகர மறுக்கின்றன
உண்மை. கால்கள் ஒத்துழைக்கவில்லை.
சிறிது நேரம் ஓய்வெடுக்கலாம். பதான்கோட்டைச்* சேர்ந்த ராஜு என்ற சிறுவனைப் பற்றிய கதை சொல்கிறேன்.
குழந்தையாக இருக்கும்போதே ராஜுவுக்குப் போலியோ.
பாவம் என் குழந்தை. அவன் கால்கள் விளங்காமல் போய் விட்டன.
எவ்வளவு முடியுமோ அவ்வளவு நன்றாக இவனைப் பார்த்துக் கொள்வோம்.
ராஜுவுக்கு இரண்டு மூத்த சகோதரர்கள் உண்டு.
துரதிர்ஷ்டவசமாக, தன் பத்தாவது வயதில் தன் பெற்றோரை இழந்தான் ராஜு.
கவனமாக இரு ராஜு, நாங்கள் வேலைக்குச் சென்று வருகிறோம்.
ஏதாவது வேலை தேடிக்கொள்ள வேண்டும்.
அதனால் -
ப்ளீஸ் சார்! நான் மேசைகளைத் துடைத்து தரையையும் சுத்தம் செய்வேன். கடினமாக உழைப்பேன்.
வேண்டாம்! உன்னால் நடக்கக் கூட முடியாது. எங்களுக்கு கஷ்டம்.

* பஞ்சாபில் ஒரு ஊர்


ஏமாற்றம், அவநம்பிக்கை அவனை பிச்சை எடுக்கத் தூண்டியது.
என் சகோதரர்களுக்கு குடும்பம் இருக்கிறது. நான் அவர்களுக்கு பாரமாக இருக்கக்கூடாது. அதே சமயம் இந்த வாழ்க்கை என்னை தோற்கடிக்கவும் விட மாட்டேன்.


சார்! ஒரு ரூபாய் கொடுங்கள்.
இந்தா!


ராஜு தங்கு சாலையில் தினமும் அமர்ந்து யாசித்தான். விரைவில், மக்கள் ராஜு நல்ல குணமுள்ள இளைஞன் என்று அடையாளம் காணத் தொடங்கினர். நிறையக் கொடுத்தனர்.
நான் தினமும் குறைந்தது 500 முதல் 700 ரூபாய் சம்பாதிக்கிறேன். எனக்கு 200 மட்டுமே தேவை. மீதியை சேமித்து மற்றவர்களுக்கு உதவுவேன்.


இவ்வாறு தேவைப்படுகிற மற்றவர்களுக்கு உதவும் ராஜுவின் பயணம் தொடங்கியது.
ஏழைப் பெற்றோருக்கு அவர்களின் மகள்களுக்குத் திருமண ஏற்பாடு செய்ய நீங்கள் உதவி செய்வதாகக் கேள்விப்படுகிறேன். எங்களுக்கு உதவுவீர்களா?
உங்கள் தேவைகளை என்னிடம் கூறுங்கள். உங்கள் மகளுக்கு திருமண வாழ்க்கை நல்லபடியாக அமைய என்னால் முடிந்ததை செய்வேன்.
ராஜு அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கு 1100 ரூபாய், 50 கிலோ அரிசி மற்றும் மின்விசிறி கொடுத்தார்.


ராஜு திருமணங்களுக்கு உதவியது மட்டுமல்லாமல், கோவிட் காலங்களில் 2500 முகமூடிகளையும் விநியோகித்தார்.
முகமூடி இல்லாமல் நடக்காதீர்கள். இதோ என்னிடமிருந்து ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். உடம்பு நன்றாக இருக்க வேண்டும்தானே!.
நன்றி, ராஜு!


தங்கு சாலையில் ஒரு பாலம் சேதமடைந்தபோது ராஜு பழுது பார்த்துக் கொடுத்தார்.
பாலத்தை சீரமைக்க ராஜு தனது சேமிப்பிலிருந்து 30,000 ரூபாயை வழங்கியதற்கு மிக்க நன்றி..


பிரதமர் நரேந்திர மோடி, தனது வானொலி நிகழ்ச்சியில் ராஜுவைப் பற்றி பேசியதை அடுத்து, ராஜுவைப் பார்க்க பலர் வந்தனர்.
நீ எங்களுக்கு ஒரு இன்ஸ்பிரேஷன், ராஜு.
எங்களுக்கு ஆதரவாக இருக்கிறீர்கள். எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.


நாம் அனைவரும் இதைச் செய்ய முடியும். பெரிய காரியங்களைச் செய்வதற்கு சிறிதளவு முயற்சியும் கொஞ்சம் இரக்கமும் மட்டுமே தேவை.




*NON-GOVERNMENTAL ORGANISATION

# குராங் மீனா




*மிசோரத்தின் தலைநகரம், இந்தியாவில் படிப்பறிவு உள்ளவர்கள் அதிகம் உள்ள நகரம்.



ஆனால் மீனா, கடன் வாங்கிய புத்தகங்களை திருப்பித் தரவில்லையென்றால் என்ன செய்வது?
அதனால் என்ன? அந்தப் புத்தகத்தால் அவர்களுக்குப் பயனென்றால் நல்லதுதானே?
நல்ல எண்ணம்!
மீனா மற்றும் தேவாங்கின் இந்த முயற்சிக்கு உள்ளூர்க்காரர்களின் ஆதரவு நிறைய இருந்தது.
இந்தா மீனா! என் குழந்தைகளின் பழைய புத்தகங்கள். நான் உன்னுடைய நூலகத்துக்குக் கொடுக்க விரும்புகிறேன்.
நன்றி சார்!
நூலகத்துக்கு புத்தகங்கள் வாங்க பலர் அவர்களுக்கு நிதி அளிக்கின்றனர்.
புத்தகம் படிப்பது படிப்பறிவை வளர்க்குமென்றும் மாணவர்களின் வாழ்க்கையை செழுமையாக்கும் என்றும் மீனா நம்புகிறார்.
எனதருமை அருணாச்சல பிரதேசமே, தயவு செய்து யோசி! அரசாங்கம்தான் வேலை செய்யவேண்டுமென்பது இல்லை. தனி மனிதர்களாக, இம்மாநில குடிமக்களாக நாம் ஏன் இன்னும் பின்தங்கியிருக்கிறோம் என்று யோசியுங்கள். குறை சொல்வதை விட்டுவிட்டு முன்னேறத்திற்கான வழியைத் தேடுங்கள்.
0:35/4:13
CC
மாநிலம் முழுவதும் பல நூலகங்கள் அமைக்க வேண்டும் என்று மீனா விரும்புகிறார். அவருடைய இந்த முயற்சி நாட்டில் உள்ள பலருக்கும் உத்வேகத்தைத் தருகிறது.



பொன் மாரியப்பன்
சுஜித், உன்னுடைய ஹேர்கட் மிகவும் நன்றாக இருக்கிறது.
ஹா! ஹா! இது இப்போது உள்ள ஸ்டைல் சார்!
சுஜித் நடிகனைப் போல தோற்றமளிக்க விரும்புகிறான் சார்!
பொன் மாரியப்பனுடைய முடி திருத்தும் நிலையத்துக்கு நீ போயிருந்தால், அவர் உனக்கு முடியையும் வெட்டி புத்தகங்களும் கொடுத்திருப்பார். பிரதமர் மாரியப்பனைப் பற்றி வானொலியில் பேசியதும் அவர் பிரபலமாகிவிட்டார்.
தூத்துக்குடியில் வசித்து வருகிறார் பொன் மாரியப்பன். அவர் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது -
தம்பி! நீ சம்பாதிக்க ஆரம்பிக்க வேண்டும். என் ஊதியத்தை வைத்துக்கொண்டு எதுவும் செய்ய முடியாது.
கண்டிப்பாக அப்பா. கவலை வேண்டாம்.
எனக்கு புத்தகங்கள் பிடிக்கும். மேலே படிக்க ஆசை ஆனால் அப்பாவுக்கும் உதவி செய்ய வேண்டும்.
பொன் மாரியப்பன் ஒரு முடி திருத்தும் நிலையம் ஆரம்பித்து நன்றாக சம்பாதிக்க ஆரம்பித்தார்.
வாழ்க்கையில் ஏதோ இழந்து விட்டதைப்போல் இருக்கிறது. என் இடத்திற்கு வருபவர்கள் வெறும் முடி திருத்த மட்டும் வரக் கூடாது.



அதனால் பொன் மாரியப்பன் தன் கடையில் எல்லா வயதினரும் படிக்கும்படியான ஒரு நூலகம் திறந்தார்.
பொன் அங்கிள் என் முடியை வெட்டிக்கொண்டிருக்கும் போது இங்கும் அங்கும் ஓடாதே கண்ணா.
மாட்டேன். இங்கே நிறைய கதைப் புத்தகங்கள் இருக்கின்றன.
ஆமாம்! உண்மைதான். என்னால் மாரியப்பன் கடையில் ஒரு முழு நாள் கூட இருக்க முடியும்.
இன்னொரு நன்மையும் உண்டு. நீங்கள் படித்த புத்தகத்தின் விமர்சனத்தை எழுதினால் அடுத்த முறை நீங்கள் முடி திருத்த வரும்போது தள்ளுபடி உண்டு.
இதனால் நான் நிறைய புத்தகம் படிப்பேன்.
அதுதானே திட்டம்! எனக்கு நிறைய பேர் புத்தகம் படிக்க வேண்டும்.
பொன் மாரியப்பனை மன் கி பாத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேர்காணல் செய்தார்.
மாரியப்பன் ஜி, எந்தப் புத்தகம் உங்களுக்கு மிகவும் பிடிக்கும்?
Thirukkural
திருக்குறள்தான் எனக்கு மிகப் பிடித்த புத்தகம்.
எந்த நிலையிலிருந்தாலும் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். வித்தியாசமாக சிந்தித்து வாழ்க்கையின் சவால்களை வெற்றிகரமான சூழ்நிலையாக மாற்ற வேண்டும்.

# கல்மனே காமேகவுடா



அது பள்ளியில் ஓய்வு நேரம் -
என்ன செய்கிறாய் லக்ஷ்மி?
வெயிலாக இருக்கிறது. சிட்டுக்குருவிகளுக்கு தாகமாக இருக்கும்.




பாருல் உதவினாள். விரைவில், மாணவர்கள் சிலர் கிண்ணங்களில் தண்ணீரைப் பிடித்து வைத்தனர்.
இங்கே என்ன நடக்கிறது?
பறவை மற்றும் மிருகங்களுக்கு தண்ணீர் வைக்கிறோம் சார்.




இந்த வெயிலில் அவை உண்மையில் தாகத்துடன் காணப்பட்டன. எனவே, உதவலாம் என்று நினைத்தேன். நாம் இதற்குமேல் என்ன செய்ய முடியும்!
ரொம்ப நல்ல காரியம் லட்சுமி. ஆனால் மக்கள் விரும்பினால், அவர்கள் மற்ற இனங்களின் நலனுக்காக இன்னும் நிறைய செய்ய முடியும். உள்ளே வந்து உட்காருங்கள். மன் கி பாத் நிகழ்ச்சியில் நமது பிரதமரால் பாராட்டப்பட்ட காமேகவுடாவின் கதையை நான் உங்களுக்கு சொல்கிறேன்.




கல்மனே காமேகவுடா என்பவர் கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் உள்ள தாசனதொட்டி கிராமத்தில் ஆடு மேய்ப்பவர்.
ஹ்ர்ர்... ஹ்ர்ர்... சீக்கிரம் வா சாந்தா! நீ எப்போதும் பின்னால்தான்.


அவர் பெரும்பாலும் குந்துரு பெட்டா மலையைச் சுற்றி தனது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் -
மிகவும் சூடாக இருக்கிறது. இந்த மலையில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை.
அப்போது -
சோர்வாக இருக்கிறாயே. உனக்கும் என்னைப் போல் தாகமா? நான் எனது கிராமத்திற்கு எனது ஆடுகளுடன் சென்று, இரண்டு மணி நேரத்தில் தண்ணீர் குடிக்க முடியும். ஆனால் பாவம் நீங்கள் என்ன செய்வீர்கள்?
இந்த எண்ணம் காமேகவுடாவை சுற்றிச் சுற்றி வந்தது -
விலங்குகளுக்காக நான் இங்கே ஒரு பெரிய குழி தோண்டி அதில் தண்ணீர் நிரப்பப் போகிறேன்.
ஆனால் அவர் எத்தனை குழிகளை நிரப்பினாலும், சில மணிநேரங்களில் தண்ணீர் ஆவியாகிறது அல்லது பூமிக்குள் வடிகிறது.
நீண்ட யோசனைக்குப் பிறகு -
மன்னிக்கவும், கமலா. குளம் தோண்டுவதற்கான கருவிகளை வாங்க உன்னையும் உன் சகோதரிகளையும் விற்க வேண்டும். உங்களுக்கும் மற்ற விலங்குகளுக்கும் நான் உதவக்கூடிய ஒரே வழி இதுதான்.
விரைவில், அவர் போதுமான ஈரப்பதம் கொண்ட நிலத்தைத் தேர்ந்தெடுத்து தோண்டத் தொடங்கினார். ஆனாலும் -
15 நாட்கள் ஆகிறது, இன்னும் என்னால் ஆழமாகத் தோண்ட முடியவில்லை. இன்னும் ஆடுகளை விற்று ஜேசிபியை வாடகைக்கு எடுக்க வேண்டும். அதுதான் ஒரே வழி.


பல மாதங்கள் கடின உழைப்புக்குப் பின் -
இப்போது நான் செய்ய வேண்டியது பருவமழைக்காக காத்திருக்க வேண்டியதுதான். மழை தெய்வங்கள் நம்மை ஆசீர்வதித்தால், இந்த குளத்தில் தண்ணீர் நிறைந்திருக்கும்.
விரைவில் -
என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. அழகான உயிரினங்களே குடியுங்கள். இதெல்லாம் உங்களுக்காகத்தான்!
மாடு, செம்மறி ஆடு மற்றும் வன விலங்குகள் கூட குளத்திலிருந்து தண்ணீரைக் குடிக்க ஆரம்பித்தன.
அது ஆரம்பம்தான். அடுத்த 40 ஆண்டுகளில், காமேகவுடா 16 குளங்களைக் கட்ட 15 லட்ச ரூபாய்க்கு மேல் செலவழித்து, கர்நாடகாவில் பிரபலமானார். ஒரு நாள் -
நான் ஒரு நிருபர். உங்கள் கதையை அறிய விரும்புகிறேன். இந்த குளங்களின் சிறப்பு என்ன சொல்லுங்கள்?
மலையிலிருந்து தண்ணீர் பாய்ந்து குளங்களை நிரப்புகிறது. ஒரு குளம் நிரம்பினால், அது அடுத்த குளத்திற்கு பாய்கிறது. குளங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளதால், கோடையில் கூட அவை வறண்டு போவதில்லை.
குளங்களை கட்டுவதுடன், காமேகவுடா ஆயிரக்கணக்கான மரங்களையும், ஆலமரங்களையும் நட்டு, மலையை முழுமையாக மாற்றினார்.
அவரது மகத்தான முயற்சி களுக்காக, காமேகவுடா பசவஸ்ரீ விருது மற்றும் கர்நாடக ராஜ்யோத்சவா விருது உட்பட பல விருதுகளைப் பெற்றார்.
விருதுத் தொகையை இன்னும் குளங்கள் வெட்ட, மரங்கள் நட பயன்படுத்தலாம்.
காமேகவுடா தனது 84வது வயதில் 2022 அக்டோபரில் இறக்கும் வரை குளங்கள் வெட்டிக் கொண்டிருந்தார். மாண்டியாவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்த இவரின் கதை, நாடு முழுவதும் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுக்கிறது.

# பிரதீப் சங்வான்
















*ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள ஒரு பிரபலமான ஏரி

^ஒரு ஆயர் பழங்குடி, முக்கியமாக இமாச்சலப் பிரதேசம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்கிறது.




*மனாலியில் உள்ள ஒரு பிரபலமான நீர்வீழ்ச்சி


மனச்சோர்வடைந்த நாட்களும் இருந்தன...
இமயமலையை சுத்தப்படுத்த ஒரு வாழ்நாள் வேண்டும்.


... ஆனால் பிரதீப் மற்றும் அவரது குழுவினர் விடாமல் முயற்சித்தனர்.
எல்லோரும் ஒன்றாக வேலை செய்யும்போது, ஒருநாள் நினைத்தது நடக்கும்.
இன்னொரு பை தா.


சமூக ஆதரவுடன், அவர்கள் இமயமலைப் பகுதியில் உள்ள கிராமங்களில் கழிவு மேலாண்மை மையங்களை அமைத்தனர்.
கழிவுகளை அகற்றுவதற்கு இவை சரியான இடங்கள். மட்டுமின்றி, உள்ளூர் மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும்.
பிரதீப் இது போன்று மேலும் பல மையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளார்.


ஹீலிங் ஹிமாலயாஸ் ஆயிரக்கணக்கான மரங்களை நட்டு, இன்றுவரை சுமார் 8,00,000 கிலோ மக்காத கழிவுகளை அகற்றியுள்ளது.
இந்தப் பயணத்தைத் தொடங்கியதிலிருந்து, நான் திரும்பிப் பார்க்கவில்லை. நிறைய செய்வதற்கு இருக்கிறது, இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம்.

# காம்யா கார்த்திகேயன்




*மும்பை அருகில், மகாராஷ்டிரா


அப்படி என்ன மலைகளில் இருக்கிறது?
நாம் போய் கண்டுபிடிக்கலாமா?
காம்யா மலையேற்றப் பயிற்சியை தானே அனுபவித்துப் பார்க்கட்டும் என்று நினைத்தார்.


சீக்கிரமே -
அற்புதம்... இல்லையா?
அட்டகாசம்!
ஏழு வயதில், உத்தரகாண்டில் உள்ள சந்திரசிலா உச்சிக்கு ஏறினாள்.


இரண்டு வருடங்களுக்குப் பிறகு காம்யா மவுண்ட் ஸ்டாக் காங்ரி ஏறினாள்
என்னுடைய முதல் 6000 மீட்டர் மலையேற்றம்!
ஹுர்ரே!


விரைவில், அவள் தனியாக ஒரு பயணத்தைத் தொடங்கினாள் -
நான் ஏழு கண்டங்களிலும் உள்ள மிக உயரமான சிகரங்களில் ஏறி வட மற்றும் தென் துருவங்களுக்குச் செல்ல விரும்புகிறேன்.
காம்யா அழைப்பது போல இந்த மிஷன் சாஹஸ்*, எக்ஸ்ப்ளோரரின் கிராண்ட் ஸ்லாம் என்று பிரபலமாக அறியப்படுகிறது.

*சாகசம்


2022ன் படி, காம்யா ஏழு மலைகளில் ஐந்தை ஏறி விட்டாள்.
TANZANIA
கிளிமஞ்சாரோ மலை, ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம்
எல்ப்ரஸ் மலை, ஐரோப்பாவின் மிக உயரமான சிகரம்
கோஸ்கியுஸ்கோ மலை, ஆஸ்திரேலியாவின் மிக உயரமான சிகரம்
அகோன்காகுவா மலை, தென் அமெரிக்காவின் மிக உயரமான சிகரம்
தெனாலி மலை, வட அமெரிக்காவின் மிக உயரமான சிகரம்
இதுவரை அகோன்காகுவா மலையேற்றம் செய்த மற்றும் எல்ப்ரஸ் மலையின் உச்சியில் இருந்து பனிச்சறுக்கு செய்தவர்களில் இளையவர் என்று சொன்னால் அது காம்யாதான்.
அவரது அசாத்தியமான தைரியத்திற்கும் மற்றும் மலையேற்றத்தில் ஏராளமான சாதனைகளுக்காகவும், இந்திய அரசாங்கம் அவருக்கு பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் விருது வழங்கி கௌரவித்தது.
(NIC)
BARAMULLA
மலைகளின் மீதான பரஸ்பர அன்பின் காரணமாக ஒரு குடும்ப சாகசமாக தொடங்கிய இந்த பயணம், ஒரு வரலாறை உருவாக்கியது. காம்யா அதிக சாதனைகளை முறியடித்து, உயர்ந்த சிகரங்களைத் தொடர்ந்து வென்று வருகிறார்.













*டவுன்ஸ் சிண்ட்ரோம் என்பது ஒரு மரபணு கோளாறு ஆகும். இது வளர்ச்சி மற்றும் அறிவுசார் தாமதங்களை ஏற்படுத்துகிறது.

^பிறவி இதய குறைபாடுகள் என்பது பிறப்பிலிருந்தே இதயத்தின் கட்டமைப்பில் உள்ள பிரச்சனைகள்


அன்வி வளர்ந்தவுடன், தன் வயதுடைய மற்ற குழந்தைகள் எளிதாகச் செய்யக்கூடிய விஷயங்களைச் செய்ய அவள் போராடினாள்.
ஏதாவது சொல். என்னுடன் பேசு. எப்போது நீ பேச ஆரம்பிப்பாய்?
அன்வி பத்து வயதாக இருக்கும்போது -
அதைப் பார்த்தாயா?
அற்புதம்!
எவ்வளவு எளிதாக வளைகிறாள்! அவளால் யோக கற்றுக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்.
நல்ல ஐடியா! அது அவளுடைய ஆரோக்கியத்திற்கும் உதவக்கூடும்.
அவனி கேட்டுக்கொண்டபடி, அன்வியின் பள்ளியில் இருந்த யோகா ஆசிரியை நம்ரதா, அவளுக்கு பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்.
மெல்ல வளைந்து உன் கால்விரலைப் பிடி. முட்டி வளையக் கூடாது.


சில வாரங்களுக்குப் பின் –
எப்படிப் போகிறது?
அவளுக்கு சில ஆசனங்கள் கடினமாக இருக்கின்றன. ஆனாலும் விடாப்பிடியாக செய்கிறாள்.
அன்வி தினமும் காலையில் ஒரு மணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் யோகா பயிற்சி செய்தாள். ஒரு நாள் -
மா...
அன்வி யோகா போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறாள்.
என்னுடைய கண்ணையே என்னால் நம்ப முடியவில்லை. மகிழ்ச்சியாக இருக்கிறது.
அடுத்த மூன்று ஆண்டுகளில், அன்வி தேசிய அளவிலான போட்டிகளில் மூன்று தங்கம் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்கள் உட்பட 51 பதக்கங்களை வென்றாள். டிசம்பர் 2021 இல் -
மாற்றுத்திறனாளிகளுக்கான சிறந்த படைப்பாற்றல் குழந்தைக்கான தேசிய விருது அன்வி சன்சாருக்கியாவுக்கு வழங்கப்படுகிறது
ஜனவரி, 2022 இல், அன்விக்கு பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் வழங்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு, பிரதமர் அலுவலகத்திலிருந்து அவரைச் சந்திக்க அழைப்பு வந்ததும் அவளுடைய கனவு நனவாகியது.
இந்தியாவுக்கு பெருமை சேர்த்திருக்கிறீர்கள். உங்களுக்கு பிரகாசமான எதிர்காலம் உள்ளது!
நன்றி.
இப்போது பிரதமருடன் இணைந்து யோகாசனம் செய்ய வேண்டும் என்பதே அவரது விருப்பம்.





# மன் கி பாத்

## தொகுதி 1

மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், அவர்களுடன் தனது இதயத்திற்கு நெருக்கமான பிரச்சினைகளைப் பேசவும் பிரதமர் நரேந்திர மோடி, அக்டோபர் 4, 2014 அன்று தனது மாதாந்திர வானொலி நிகழ்ச்சியான 'மன் கி பாத்' நிகழ்ச்சியைத் தொடங்கினார்.

ஏப்ரல் 2023 இல், இந்த நிகழ்ச்சியின் 100 அத்தியாயங்களை அவர் முடித்தார். இதன் மூலம் இந்தியாவின் சாதாரண குடிமக்கள் இந்தியாவுக்காக செய்த சில ஊக்கமளிக்கும் பணிகளை அவர் உலகத்துக்குத் தெரிவித்தார். தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் குறிப்பிடத்தக்க சாதனைகள் குறித்தும் பேசினார். இயலாமை, வறுமை மற்றும் ஊக்கமின்மை ஆகியவற்றைக் கடந்து பெரிய உயரங்களை எட்டியவர்கள், தங்களுடைய நம்பிக்கையால் மற்றவர்களை ஊக்குவித்து சாத்தியமற்ற இலக்குகளை அடையத் தூண்டியவர்கள் என்று பலரை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

அமர் சித்ரா கதா, கலாச்சார அமைச்சகத்துடன் இணைந்து 'மன் கி பாத்' நிகழ்ச்சியில் பிரதமர் சொன்ன கதைகளைத் தேர்ந்தெடுத்து 12 காமிக்ஸ் தொடர்களாக வழங்கவிருக்கிறது. அதில் இது முதலாவது.



₹90

ISBN 978-81-19242-32-0